DINAMANI 01 OCT 2008

# அக்.4-ல் ஆலாந்துறையில் ஈஷா மருத்துவமனை துவக்கம்

**கோவை, செப். 30:** ஈஷா அறக்கட்டளையின் கிராமப் புத்துணர்வு இயக்கத்தின் சார்பில் கோவையை அடுத்த ஆலாந்துறையில் ஈஷா மருத்துவமனை அக்டோபர் 4-ம் தேதி துவங்கப்படுகிறது.

இது குறித்து கிராமப் புத்துணர்வு இயக்க ஒருங்கிணைப்பாளர் கே.சேகர், ஈஷா யோக மைய நிர்வாகி எம்.எஸ். ராஜரத்தினம் ஆகியோர் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறியது:

ஈஷா யோக மையத்தின் கிராமப் புத்துணர்வு இயக்கத்தின் சார்பில் கோவை மாவட்டம் வாவிபாளையம், சேலம் மாவட்டம் குள்ளப்பநாயக்கனூர் ஆகிய இடங்களில் ஈஷா கிராம மருத்துவமனைகள் செயல்படுகின்றன. இதுவரை 60 கிராமங்களைச் சேர்ந்த 35 ஆயிரம் பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது 3-வதாக ஆலாந்துறையில் மருத்துவமனை துவங்கப்படுகிறது. நவீன, மாற்று மருத்துவச் சிகிச்சை, அறுவைச் சிகிச்சை வசதிகள் உள்ளன. 24 மணி நேரமும் மருத்துவமனை செயல்படும். மருத்துவ ஆலோசனைக்கு ரூ.5 மட்டுமே வசூலிக்கப்படும்.

சலுகைக் கட்டணத்தில் மருத்துவப் பரிசோதனைகள் செய்து கொள்ளும் வகையில், நவீன வசதிகளுடன் சோதனைக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், முதியோர் மற்றும் குழந்தைகளின் நலன் காத்தல், ஊட்டச்சத்துப் பற்றாக்குறையை நீக்குதல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு இம் மருத்துவமனை செயல்படும்.

**கிராம மக்கள் மேம்பாட்டுத் திட்டம்:** சுஸ்லான் நிறுவனத்துடன் இணைந்து கிராம மக்கள் மேம்பாட்டுத் திட்டம் துவங்கப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ் ஆரோக்கிய கிராமங்களை உருவாக்கி, கிராமப் பொருளாதார மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

உடுமலைப்பேட்டை, கிணத்துக்கடவு பகுதியைச் சேர்ந்த 10 கிராமங்கள், கருமத்தம்பட்டி, கிட்டாம்பாளையம் ஊராட்சிகளில் இத் திட்டம் தொடங்கப்படுகிறது.

ஈஷா மருத்துவமனை, கிராம மக்கள் மேம்பாட்டுத் திட்டம் துவக்க விழா ஆலாந்துறையில் அக்.4-ம் தேதி நடைபெறுகிறது. ஈஷா யோக மைய நிறுவனர் சத்குரு ஜகி வாசுதேவ், தொண்டாமுத்தூர் எம்எல்ஏ மு.கண்ணப்பன், மைக்ரோசாப்ட் இந்தியா நிறுவனத் தலைவர் ரவி வெங்கடேஷ், சுஸ்லான் நிறுவன நிர்வாகி வி.எஸ்.ஆர். ரமேஷ்ராவ் ஆகியோர் விழாவில் பங்கேற்கின்றனர்.